www.tamilarangam.net

10-4-1985

001539

தமிழீழப் போராட்டத்தில் புதிய திருப்பம்
விடுதலை அமைப்புக்கள் ஒன்றுபட்டன.

ஈழத் தமிழ்பேசும் மக்களின் தேசிய சுதந்திரப் போராட்டத்தைமுன்னெடுப்பதில் ஒன்றுபட்டுச் செயல்ப்பட ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் முடிவுசெய்துள்ளன. 1984ம் ஆண்டு எப்ரல் மாதம் உருவாக்கப்பட்ட ஈழத்தேசிய விடுதலை முன்னணியானது மூன்று முக்கிய விடுதலை அணிகளின் கூட்டமைப்பாகும். தமிழீழ விடுதலை இயக்கம்(T.E.L.O) ஈழப்புரட்சி அமைப்பு(EROS ), ஈழமக்கள் புரட்சிகரவிடுதலை முன்னணி(EPRLF ) ஆகியன இக்கூட்டமைப்பில் அங்கம்வகிக்கின்றன.

புரட்சிகர ஆயுதப்போராட்டப் பாதையை தழுவிக் களத்தில் போராடும் இந்த நான்கு விடுதலை இயக்கங்கள் மத்தியில் ஒருமைப்பாடு ஏற்பட்டமை எமது விடுதலைப் போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகும். ஈழத் தமிழரின் சுதந்திரப் போரில் ஒருதிருப்புமுனையாக அமைந்துள்ள இந்நிகழ்ச்சி புரட்சிகர சக்திகளை ஒன்றிணைத்து ஆயுதப்போராட்டத்தை ஒருமுகப்படுத்தி வலுப்படுத்த வழிகோலியுள்ளது. இராணுவப்பயங்கரவாத அட்டூழியங்களையும், கொலையையும் எதிர்நோக்கி தாங்கொணாத் துன்பத்தை அனுபவித்துவரும் மக்களுக்கு எமது விடுதலை அணிகள் ஒன்றுபட்டசெய்தி பெருமகிழ்ச்சியையும், நம்பிக்கையையும் அளிப்பதோடு, அவர்களது ஆன்மஉறுதியையும், விடுதலை உணர்வையும் பலப்படுத்துமென்று கருதுகிறோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழப் புரட்சி அமைப்பு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டமைப்பான ஈழத்தேசிய விடுதலை முன்னணியும் கீழ்க்கண்ட அரசியல்ரீதியான அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றுபட்டுச் செயல்ப்படத் தீர்மானித்துள்ளன.

(1) ஸ்ரீலங்கா அரசின் ஆதிக்கத்திலிருந்தும், அடக்குமுறையிலிருந்தும் எமது தாயகத்தின் சுதந்திரத்தையும், இறைமையையும்வென்றெடுத்தல்.

(2) இலங்கைவாழ் தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டுகின்ற தனியரசைத் தவிர்ந்த வேறெந்த குறைந்த பட்ச சமரசத் திட்டத்தையும் அங்கீகரிப்பதில்லை.

(3) பரந்துபட்ட மக்களின் பங்களிப்போடு பரிணமம் பெறும் வெகுஜன ஆயுதப்போராட்டத்தை(மக்கள் போராட்டத்தை) எமது போராட்டப் பாதையாகக் கொள்ளுதல்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(4) தேசிய சுதந்திரப் போராட்டத்தோடு சோசலிச புரட்சியையும் முன்னெடுத்து, சுதந்திரத் தாய்நாட்டில் சோசலிச சமுதாயத்தைக் கட்டியெழுப்புதல்.

(5) உலக ஏகாதிபத்திய, நவகாலனித்துவப் பிடியிலிருந்து எமது தேசத்தை பூரணமாக விடுவித்து, அணி சேராக் கொள்கையைக் கடைப்பிடித்தல்.

தற்போது ஒப்புக்கொள்ளப்பட்ட குறைந்தபட்ச வேலைத்திட்டமாக, முக்கிய அரசியல் பிரச்சனை குறித்து ஒன்றுகூடிக் கலந்தாலோசித்து முடிவெடுப்பதெனவும், ஸ்ரீலங்கா அரசபடைகளுக்கெதிரான எமது ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளை ஒன்றுபடுத்தி செயல்ப்படுத்துவதெனவும் தீர்மானித்துள்ளோம்.

எமது இந்த ஒருமைப்பாடு விரிவுபட்டு வலுப்பெற ஒத்துழைப்பும் ஆதரவும் தருமாறு எமது மக்களின் விடுதலையில் அபிமானங்கொண்ட சகல தமிழ் மக்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

வே. பிரபாகரன்.
தலைவர்
தமிழீழ விடுதலைப் புலிகள்

தலைவர்
தமிழீழ விடுதலை இயக்கம்

க. பத்மநாபா
செயலதிபர்
ஈழமக்கள் புரட்சிகர
விடுதலை முன்னணி

1
2
புரட்சிகர நிறைவேற்றுக்குழு
ஈழப் புரட்சி அமைப்பு

10/4/85

10 APR 1985

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்